பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 15 புதன்கிழமை 29.06.2022 கதிர் 127

## குளத்தில் தவறி வீழ்ந்து குழந்தை பரிதாபச் சாவு

### கண்டியில் துயரம்



வீட்டுக்கு முன்னால் உள்ள குளத்தில் தவறி வீழ்ந்து மூன்று வயது குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

கண்டி மாவட்டம், பன்வில பொலிஸ் ☞ 2

## எரிபொருள் பதுக்கல்; 768 பேர் சிக்கினார்கள்

நாட்டில் எரிபொருள் நெருக்கடி தலைதூக்கியுள்ள நிலையில், எரிபொருளைப் பதுக்கி வைத்திருந்த 768 பேர் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.



நாடு தழுவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு, தேடுதல் நடவடிக்கைகளின்போது இதுவரை 23 ஆயிரத்து 728 லீற்றர் பெற்றோலும், ☞ 2

## 12 வருடத்தின் பின் விடுதலையான கைதிக்கு 55 இலட்சம் ரூபா இழப்பீடு

### வழங்கியது அரச தரப்பு

12 வருடங்களின் பின்னர் நிரபராதி என்று விடுதலையான கைதிக்கு நட்டஈடு வழங்கக் கோரி அரசுக்கு எதிராக சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசாவால் மனித உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டதையடுத்து 55 லட்சம் ரூபா இழப்பீடு அரச தரப்பால் வழங்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ்கைதுசெய்யப்பட்டுவிடுதலை செய்யப்பட்ட கைதிக்கு நட்டஈடு வழங்கப்பட்ட முதல் வழக்கு இதுவாகும்.

கொழும்பு - 8, பொரளை பொலிஸ் நிலையத்துக்குப் பின்புறமாக இரகசியமாக ☞ 2

### மறைத்து வைக்கப்பட்டிருந்த

## பெற்றோலால் பறிபோன உயிர்


திருகோணமலை, அன்புவழிபுரத்தில் தீக்காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண்ணின் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பெற்றோல் மூலம் தீ பரவியிருக்கலாம் என்றுபொலிஸாரின்விசாரணையில் தெரிவந்துள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

### கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் கலவரம்

# கைதி ஒருவர் கொலை; 500 பேர் தப்பியோட்டம்!

### பொலிஸ், இராணுவம் தேடுதல் வேட்டை




**பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள வெலிக்கந்தை - கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் கைதி ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். அத்துடன், அங்கிருந்து 500 இற்கும் மேற்பட்ட கைதிகள் தப்பியோடியுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.** ☞ 2

## மொரட்டுவையில் இருவர் இன்று சுட்டுப் படுகொலை

மொரட்டுவை – கட்டுபெத்த சந்தியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் இன்று முற்பகல் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இம்மாதம் மாத்திரம் கொழும்பு உள்ளிட்ட நாட்டின் பல பகுதிகளில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச்சம்பவங்களால் 10 மரணங்கள் பதிவாகியுள்ளன.

இதில் அதிகளவான மரணங்கள் களனி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பதிவாகியுள்ளன.

கடந்த 26ஆம் திகதி இரவு பேலியகொடை தொடரூந்து நிலைய வீதி பகுதியில் துப்பாக்கிச்சூட்டு சம்பவமொன்று பதிவானது.

பாதாள உலகக் குழுக்களுக்கிடையே ஏற்பட்ட மோதல்களே இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களுக்குக் காரணம் என்று தெரியவந்துள்ளது.

## கூட்டமைப்பு, ஜே.வி.பியுடன் இணைந்து அரசுக்கு எதிராக சஜித் அணி போராட்டம்



கட்சிக் கூட்டத்தில் தீர்மானம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி.) உள்ளிட்ட பிரதான கட்சிகளுடன் பேச்சு நடத்தி, அரசுக்கு எதிராக பாரியதொரு வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் ☞ 2

### கொரோனாவின் தாக்கம்;

## மீனாவின் கணவர் மரணம்!



நடிகை மீனாவின் கணவர் வித்யாசாகர் உடல்நலக்குறைவு காரணமாக உயிரிழந்தார்.

கொரோனா நோய்த் ☞ 2

## செய்தியாளர்களுக்கும் பெற்றோல் விநியோகம்



மட்டக்களப்பு லங்கா ஐ.ஓ.சி.எரிபொருள் நிரப்பு நிலையத்தில்பிராந்தியஊடகவியலாளர்கள், பொலிஸார் மற்றும் அரச ஊழியர்கள் ஆகியோருக்குப் பெற்றோல் விநியோகிக்கப்பட்டன.

எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர் கே.செல்வராசாவின் மேற்பார்வையில் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்க முன்னிலையில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்குப் பெற்றோல் விநியோகிக்கப்பட்டது.

மாவட்டத்திலுள்ள பிராந்திய ஊடகவியலாளர்கள் எரிபொருள் நிரப்பு ☞ 2

## கொலம்பியா சிறைச்சாலையில் கலவரம்; 51 கைதிகள் கொலை!



தென் அமெரிக்க நாடான கொலம்பியாவில் சிறைக் கைதிகளிடையே ஏற்பட்ட கலவரம், தீ வைப்புச் சம்பவங்களில் 51 பேர் கொல்லப்பட்டனர்.

சிறைக் கைதிகளிடையே கலவரம்மூண்டதையடுத்து படுக்கை மற்றும் மெத்தைகளுக்குக் கைதிகள் தீ வைத்ததில் சிறை முழுவதும் பரவி 51 பேர் உயிரிழந்தனர்.

தீ மற்றும் வெட்டுக் காயங்களுடன் 20 இற்கும் மேற்பட்ட கைதிகள், சிறைக் காவலர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தக் கலவரத்தில் ☞ 2

## 12 வருடத்தின் பின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இயக்கப்பட்ட புலனாய்வுப் பிரிவில் புலனாய்வு அதிகாரியாகச் சேவையாற்றி வந்த துர்யலாகே தர்மதாச 2007ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 7ஆம் திகதி பயங்கரவாதத் தடைப் பிரிவுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட அரச புலனாய்வுத்துறை அதிகாரியை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்து விசாரணை நடத்திய பின்னர் அவருக்கு எதிராக RDX 23 கிராம் தனி உடைமையில் வைத்திருந்தமை, 35 துப்பாக்கி ரவைகள் மற்றும் 8 சயனைட் வில்லைகளை தனி உடைமையில் வைத்திருந்தமைமற்றும்பாதுகாப்புஇரகசியங்களை தமிழீழ விடுதலைப் புலிகளின் உளவுத் துறைக்கு வழங்கியமை என மூன்று குற்றச்சாட்டுகள்சுமத்தப்பட்டுஅவசரகால ஒழுங்கு விதிகளின் கீழ் 2010ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றச் சாட்டுப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

12 வருடங்களாக நடைபெற்ற விசாரணைகளின் பின்னர் அரச தரப்பினதும், எதிராளி தர்மதாச சார்பாக ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி. தவராசாவினதும் வாதப் பிரதிவாதங்களை செவிமடுத்த மேல் நீதிமன்ற நீதிபதி பிரதீப் ஹெட்டிஆராச்சி, தனது தீர்ப்பில் எதிராளி தரப்பு வாதத்தை கவனத்தில் கொண்டு எதிராளி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை அரச தரப்பு நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்க தவறியுள்ளமையால் எதிராளியான முன்னாள் புலனாய்வுத்துறை அதிகாரியை 2019ஆம் ஆண்டு விடுதலை செய்து அறிவித்தார்.

2019ஆம் ஆண்டு விடுதலை செய்யப்பட்ட தர்மதாச சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி கௌரி சங்கரி தவராசா பொலிஸ்மா அதிபர், களனி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரொான் டயஸ், சிறைச்சாலைப் பொறுப்பதிகாரி, சிறைச்சாலை அத்தியட்சகர், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோரைப் பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிட்டு அரசமைப்பின் 17 மற்றும் 126 ஆம் உறுப்புரைகளுக்கு அமைய உயர்நீதிமன்றத்தில் மனித உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டது.

அந்த மனுவில், சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது சிறுநீரகப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டிருந்த தர்மதாச சிறுநீரகக் கோளாறால் அவஸ்தைப்பட்டுள்ளார். ஆனால், அதனைச் சிறை அதிகாரிகள் ஒரு பொருட்டாகவே எடுக்கவில்லை. சிகிச்சை அளிக்காமல் கைதியை நோயில் துடிக்க விடுவது கூட கோரமான சித்திரவதைதான். விளக்கமறியலில் இருந்தபோது தர்மதாச அடிக்கடி சுகவீனம் அடைந்துள்ளார்.

சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்தபோது உரிய சிகிச்சைகள் வழங்கப்படாமையாலேயே அவரின் நோய் தீவிர நிலைமைக்குச் சென்றுள்ளது. இப்போது அவரின் இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்து இரத்தச் சுத்திகரிப்புச் செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

மனுதாரருக்கு உரிய சிகிச்சையும், பராமரிப்பும் வழங்கப்பட்டிருந்தால் இவ்வாறான மோசமான நிலையை அடைந்திருக்கமாட்டார். தர்மதாசவின் இந்த நிலைக்குப்பொலிஸாரும், சிறைச்சாலை தரப்பினரும், சட்டமா அதிபருமே காரணம். எனவே, நீதியான நிவாரணம் வேண்டும் - என்று கோரப்பட்டிருந்தது.

அத்துடன், அந்த மனுவில் மேலும், ஒரு நிரபராதியான நேர்மையான பொலிஸ் உத்தியோகத்தரை 12 வருடங்கள் சிறை வைத்திருந்து அவரின் எதிர்காலத்தையே இருளாக மாற்றிவிட்டது அரசு. தர்மதாச குற்றமற்றவர் என்று விடுவிக்கப்பட்ட போதும் அவரை மீளவும் பொலிஸ் பதவியில் அமர்த்தவோ நஷ்டஈடு வழங்கவோ எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

அவர் சிறையில் இருந்தபோது மாமியாரின் ஓய்வூதியப் பணமே தர்மதாசவின் பிள்ளைகளுக்கும், மனைவிக்கும் வாழ்க்கையைக் கொண்டு செல்ல உதவியது. தர்மதாச விடுவிக்கப்பட்ட பின்னரும் கூட பொலிஸ் வேலை மீளக் கிடைக்காமையால் தொடந்தும் அவரது குடும்பம் மாமியாரின் ஓய்வூதியப் பணத்தையே தங்கள் வாழ்வாதாரமாக நம்பியிருக்க வேண்டிய அவலம் தொடர்கின்றது - என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், தர்மதாச 2021ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மரணமடைந்ததையடுத்துதர்மதாசவின்மனைவியான சந்தியா தமயந்தி மனுதாரராகப பெயரிடப்பட்டு தாக்கல் செய்யப்பட்ட மனு உயர்நீதிமன்றில் விசாரணைக்குத் திகதி குறிப்பிடப்பட்டிருக்கையில், இம்மாதம் 24ஆம் திகதியிடப்பட்டு தர்மதாசவின் மனைவிக்கு 55 லட்சத்து 23 ஆயிரத்து 808 ரூபாவுக்கான காசோலை அரச தரப்பால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

## குளத்தில் தவறி வீழ்ந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவுக்குட்பட்ட மடுகெலே காட்டின் மேல் பகுதியில் நேற்று மாலை இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை குளத்தில் தவறி வீழ்ந்துள்ளது.

சடலம் மடுல்லக்கலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பன்வில பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## எரிபொருள் பதுக்கல்; ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

41 ஆயிரத்து 382 லீற்றர் டீசலும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன், 11 ஆயிரத்து 876 லீற்றர் மண்ணெண்ணெய்யையும் மீட்கப்பட்டுள்ளது. கைதானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## கூட்டமைப்பு, ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றக் குழுக் கூட்டம் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நேற்று கட்சித் தலைமையகத்தில் நடைபெற்றது.

இதன்போது சமகால அரசியல், பொருளாதார நிலைவரங்கள் தொடர்பில் விரிவாக அலசி ஆராயப்பட்டன.

அதன்பின்னரே - தற்போதைய அரசை விரட்டுவதற்குப் பாரியதொரு வேலைத்திட்டம் அவசியம் எனவும், அதனை உருவாக்க பிரதான கட்சிகளுடன் எதிர்வரும் 6 நாள்களுக்குள் பேச்சு நடத்தி இணக்கத்துக்கு வரவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

எனினும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச்சு நடத்தாதிருக்கவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## செய்தியாளர்களுக்கும் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைய உரிமையாளரிடம் விடுத்த வேண்டுகோளின் பேரில் பிராந்திய ஊடகவியலாளர்களுக்கும் பெற்றோல் வழங்கப்பட்டது.

## கொலம்பியா ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்தகைதிகளின்உறவினர்களும் சிறைக்கு வெளியில் கலவரப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது பலர் காயமடைந்துள்ளனர்.

## மீனாவின் கணவர் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொற்றையடுத்து ஏற்பட்ட நுரையீரல் மற்றும் இருதயப் பிரச்சினை காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவருக்கு அந்த உறுப்புகள் செயலிழந்து விட்டதால் உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை செய்ய மருத்து-வர்கள் திட்டமிட்டிருந்தனர்.

ஆனால், உறுப்புகள் கிடைக்காமல் போகவே, அவருக்கு உடல் உறுப்பு மாற்று அறுவைச் சிகிச்சை செய்ய மருத்துவர்களால் இயலவில்லை என்று கூறப்படுகின்றது.

உடலின் பிற உறுப்புகளும் ஒவ்வொன்றாக செயலிழந்து போனதால் சிகிச்சை பலனின்றி வித்யாசாகர் உயிரிழந்தார்.

தமிழ் சினிமாவில் கொடி கட்டிப் பறந்த நடிகை மீனா, வித்யாசகர் என்பவரை 2009இல் திருமணம் செய்தார். இவர்களுக்கு நைனிகா என்ற அழகிய பெண் பிள்ளையும் உண்டு.

அட்லி மற்றும் விஜய் கூட்டணியில் முதன் முறையாக வெளியான 'தெறி' திரைப்படம் இரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றிருந்தது. இந்தப் படத்தில் நடிகை மீனாவின் மகள் பேபி நைனிகா நடித்திருந்தார்.

## கைதி ஒருவர் கொலை; .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

கந்தக்காடுபுனர்வாழ்வுநிலையத்தில் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்களுக்குச் சிகிச்சை மற்றும் புனர் வாழ்வு அளிக்கப்பட்டு வருகின்றது. அங்கு புனர்வாழ்வு நிலையத்தின் ஆணையாளர் நாயகத்தின் கீழ் சுமார் ஆயிரம் கைதிகள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில், இரு குழுக்களுக்கிடையில் நேற்றிரவு மோதல் ஏற்பட்டது. இதில் மோதரைப் பகுதியைச் சேர்ந்த 36 வயதுடையகைதிஒருவர் உயிரிழந்தார். இதையடுத்துப் புனர்வாழ்வு நிலையத்தில் பதற்றம் ஏற்பட்டது.

இந்த நிலைமைக்கு மத்தியில் இன்று அதிகாலை அங்கிருந்து சுமார் 500 இற்கும் மேற்பட்ட கைதிகள் தப்பிச் சென்றனர்.

தப்பியோடிய கைதிகளைத் தேடும் நடவடிக்கையில் பொலிஸாரும் இராணுவத்தினரும் ஈடுபட்டுள்ளனர் என்று கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தின் ஆணையாளர் நாயகம் தெரிவித்தார்.

இதேவேளை, புனர்வாழ்வு நிலையத்தில் மீதமுள்ள கைதிகள் போராட்டம் நடத்தி வருகின்றனர் என்றும், பொலிஸாரையோ அல்லது பாதுகாப்புப் படையினரையோ புனர்வாழ்வு நிலையத்துக்குள் நுழைய அவர்கள் அனுமதிக்கவில்லை என்றும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மேலும் வீழ்ச்சி உறுதி

பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இத்தகைய நிலைமை வரப்போகிறது என்று எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டே வந்தன. கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற கையோடு அடுத்த பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவதற்காக வரித் தளர்வுகளை பெருத்த எடுப்பில் அறிவித்தார். அச்சமயத்திலேயே பொறியியலாளர்கள் பலரும் இத்தகைய நிலைமை வரும் என எச்சரித்தனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் இத்தகைய அறிவிப்புகளை தேர்தல் விஞ்ஞாபனத்தில் வாக்குறுதியாக கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்த போதே இப்படியாகும் என அப்போதைய நிதி அமைச்சர் மங்கள சமரவீர எதிர்வு கூறினார். கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்துள்ள வரிச்சலுகைகள், பொருளாதார திட்டங்கள் போன்றவற்றை நடைமுறைப்படுத்தினால் நாடு வங்குரோத்து நிலையை நோக்கி கடுகதி ரயிலில் பயணம் செய்து விரைந்து அதனை அடைந்துவிடும் என்று அவர் எச்சரித்திருந்தார். அவர் சொன்னபடி கன கச்சிதமாக நடந்தேறியிருக்கின்றது.

கடந்த ஆண்டு இறுதியிலேயே சர்வதேசக் கடன் தவணைகளுக்கான கடப்பாடுகளை செலுத்த முடியாத இக்கட்டு நெருங்கி வருகின்றது, இது தவிர்க்க முடியாதது என்று எதிர்க்கட்சியினர், பொருளாதார நிபுணர்கள் எல்லோருமே எச்சரித்தனர்.

இதில் வேடிக்கை என்னவென்றால் – விசனத்துக்குரிய விவகாரம் என்னவென்றால் – இப்படி எல்லாம் ஆகும் எனப் பல தரப்பினரும் எச்சரித்த சமயங்களில், அந்த எச்சரிக்கைகளை ஆட்சித் தலைமை வெறும் அரசியல் நோக்கம் கொண்ட அபத்தக் குற்றச்சாட்டுக்கள் என நையாண்டி செய்து புறமொதுக்கி வந்தமைதான். கடந்த வருட இறுதியில் கூட இப்படி எச்சரிக்கப்பட்டபோது, அச்சமயத்தில் இருந்த கடன் நிலுவையை, அங்கு, இங்கு நிதியைப் புரட்டி, மக்களின் அத்தியாவசிய சேவைகளுக்கான ஒதுக்கீடுகளை வெட்டிக் குறைத்து புறக்கணித்துவிட்டு, அந்தத் தவணைப் பணத்தை செலுத்தி விட்டு, அரசுத் தரப்பு மார்தட்டியது. எப்படியும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்துவோம், நாட்டு மக்கள் அஞ்சத்தேவையில்லை, கடனிறுக்க வழியற்ற நிலைமை வராது என்றெல்லாம் பீற்றினார்கள்.

கடைசியில் என்ன நடந்தது? கடன் தவணை செலுத்த முடியாது என்று இப்போது கையைத் தூக்கி கொண்டு நிற்கின்றார்கள்.

நாட்டைக் கடன் கொடுக்க வழியில்லாத வங்குரோத்து நிலைக்குக் கொண்டுவந்து மாட்டிவிட்டு, அதற்கு வெட்கப்படாத – ரோஷமே கொள்ளாத– விசனப்படாத – பொறுப்பேற்காத தலைவராக உள்ளார் ஜனாதிபதி கோட்டாபய.

தார்மீக ரீதியில் மக்கள் ஆணையை – செல்வாக்கை –அங்கீகாரத்தை – இழந்துவிட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது தவறான கொள்கைப் போக்கால் நாட்டை இன்னும் கெடுத்துக் குட்டிச் சுவராக்கி விட்டுத்தான் பதவியை விட்டு இறங்குவார் போல தோன்றுகிறது. அவர் பதவியை விட்டு விலகும் வரை நாட்டுக்கு வீழ்ச்சியைத் தவிர வேறு எதுவும் இல்லை என்பதுதான் உண்மை.

## எத்தியோப்பியா தொடர்பான சர்வதேச மனித உரிமைகள் நிபுணர்குழு உறுப்பினராக ராதிகா குமாரசுவாமி நியமனம்



எத்தியோப்பியா தொடர்பான சர்வதேச மனித உரிமைகள் நிபுணர் குழுவின் உறுப்பினராக இலங்கையைச் சேர்ந்த ராதிகா குமாரசுவாமி நியமிக்கப்பட்டிருக்கிறார் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தலைவர் பெட்ரிகோ விலைகஸ் நேற்று (செவ்வாய்க்கிழமை) அறிவித்துள்ளார்.

ஏற்கனவே மேற்குறிப்பிட்ட குழுவின் உறுப்பினர்களாக கென்யாவைச் சேர்ந்த காரி பெற்றி முருங்கி மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த ஸ்டீவென் ரற்னர் ஆகியோர் கடந்த மார்ச் மாதம் 2 ஆம் திகதி நியமிக்கப்பட்ட நிலையிலேயே மூன்றாவதாக இலங்கையைச் சேர்ந்த ராதிகா குமாரசுவாமி நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

இந்தக் குழுவின் உறுப்பினராகக் கடமையாற்றிய பற்றோ பென்சூடா கடந்த 8 ஆம் திகதி பதவி விலகியதையடுத்தே இந்த நியமனம் இடம்பெற்றிருக்கின்றது.

எத்தியோப்பியாவில் கடந்த 2020 நவம்பர் மாதத்திலிருந்து இடம்பெற்ற சர்வதேச மனித உரிமை மீறல்கள், மனிதாபிமான மற்றும் அகதிகள் சட்டமீறல்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்காக கடந்த 2021 டிசெம்பர் 17 ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையால் சர்வதேச மனித உரிமைகள் நிபுணர்கள் குழு உருவாக்கப்பட்டது.

ராதிகா குமாரசுவாமி மனித உரிமைகள் சட்டத்தரணி என்ற ரீதியில் பலவருடகால அனுபவத்தைக் கொண்டிருப்பதுடன், அவர் இலங்கையிலும் சர்வதேச ரீதியிலும் பல்வேறு முக்கிய பதவிகளை வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புத்தர் சிலை நிறுவமுற்பட்டமையை தடுத்தவருக்கு குருந்தூரில் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தலாம்!

### கஜேந்திரகுமார் குற்றச்சாட்டு



(கலையமுதன்)

குருந்தூர் மலைப்பகுதியில் புத்தரின் சிலையை நிறுவ முற்பட்ட நிலையில் அதனைத் தடுக்கப் போராடிய ஒருவருக்கு துப்பாக்கி முனையில் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடக சந்திப்பிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த 13 ஆம் திகதி குருந்தூர் மலைப்பகுதியில் புத்தரின் சிலையை நிறுவ முற்பட்ட நிலையில் அந்த செயற்பாடு போராட்டம் மூலம் தடுக்கப்பட்டது.

இந்த நிலையில் 15 ஆம் திகதி அந்த போராட்டத்தில் ஈடுபட்டவரை அச்சுறுத்தும் வகையில் இனந்தெரியாத நபர்கள் செயல்பட்டனர். குறித்த நபர் தனது வழமையான பணிகளை ஆற்றிவிட்டு வீட்டுக்கு செல்லும் போது இரண்டு இனந்தெரியாத நபர்கள் மூலம் துப்பாக்கி முனையில் அச்சுறுத்தப்பட்டார். அவர்கள் இரண்டு பேரும் அருகிலுள்ள இராணுவ முகாமுக்குள் சென்றனர். இந்தப் பிரச்சினைக்கு பின்னர் பாதுகாப்பு காரணங்களுக்காக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டவர் இடம்பெயர்ந்து வேறுபகுதியில் வசிக்கின்றார்.

இது பற்றி பொலிஸாருக்கு அவர் முறைப்பாட்டை செய்திருந்ததுடன் எங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு இந்த விடயங்களைப் பதிவு செய்திருந்தார். அத்துடன் யாழ்ப்பாணம் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ய முற்பட்டபோது முல்லைத்தீவை சேர்ந்தவர் என்ற வகையில் வவுனியாவிலுள்ள மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாட்டை பதிவு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

முன்னர் பொதுமக்கள் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்த அமைச்சர் சரத்வீரசேகர எமது கட்சியின் பொதுச்செயலாளர் கஜேந்திரனின் பெயரை பதிவு செய்ததுடன் ஏனைய தமிழ் தரப்புகளை பொதுமக்களையும் தமிழ் அடையாளங்களைப் பாதுகாக்க இடங்களை பாதுகாக்க முற்படுகின்றவர்களையும் மிக மோசமான முறையில் நாடாளுமன்றத்தில் அச்சுறுத்தியிருந்தார். இது தொடர்பாக இந்த அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுத்ததாக தெரியவில்லை. ஜெனிவாவுக்கு ஜூலை மாதம் சென்ற பல கதைகளைக் கூற இருக்கும் நிலையில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தற்போதைய நாட்டின் சூழலிலும் தமிழ் தேசத்தை அழிக்கும் செயற்பாடுகளில் அரசாங்கம் முனைப்பாகச் செயற்படுகின்றது. - என்றார்.

இந்த ஊடக சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரனும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட நபரும் பங்கேற்றமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளவர்களை சர்வதேச நீதிமன்றில் நிறுத்த பாதுகாப்புசபை ஆதரவளிக்காது

### பிரிட்டன் தெரிவிப்பு



பிரிட்டனின் பொதுநலவாய வெளிவிவகார சர்வதேச அபிவிருத்தி அமைச்சிற்கு இலங்கை மனித உரிமை முன்னுரிமை நாடுகளில் ஒன்று என தெரிவித்துள்ள பிரிட்டிஷ் அமைச்சர் விக்கிபோர்ட் இலங்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களை சர்வதேச நீதிமன்றத்தின் முன் பாரப்படுத்தும் முயற்சிக்கு ஐக்கியநாடுகள் பாதுகாப்பு சபையின் ஆதரவு கிடைக்காது என மதிப்பிட்டுள்ளேன் எனத் தெரிவித்துள்ளார்.

தொழிற்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்டீபன் மோர்கன் நாடாளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் பிரிட்டனின் பொதுநலவாய வெளிவிவகார சர்வதேச அபிவிருத்தி இணையமைச்சர் விக்கிபோர்ட் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழ் சமூகத்திற்கு எதிரான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களை சர்வதேச நீதிமன்றத்தின் முன்னால் நிறுத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என ஸ்டீபன் மோர்கன் கேள்வி எழுப்பினார்.

சர்வதேச நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தும் நடவடிக்கைகளுக்கு பாதுகாப்பு சபை ஆதரவளிக்காவிட்டால் அல்லது வீட்டோ செய்தால் அதன் காரணமாக பொறுப்புக்கூறச்செய்யும் நடவடிக்கைகள் பாதிக்கப்படலாம் என விக்கிபோர்ட் தெரிவித்துள்ளார்.


# 51 அகதிகள் மூச்சுத் திணறி பலியான சம்பவம்; அமெரிக்க அதிபர் ஜோ பைடன் வேதனை

அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் லொறியில் சென்ற போது மூச்சுத் திணறி இறந்த அகதிகளின் எண்ணிக்கை 51 ஆக உயர்ந்துள்ளது. இது பொலிஸார் உள்ளிட்ட சிலர் நடத்திய ஆள்கடத்தல் முயற்சி என்று அதிர்ச்சி தகவல் விசாரணையில் தெரியவந்துள்ளது. டெக்சாஸ் மாகாணத்தில் சான் ஆன்டோனியோ என்ற இடத்தில் ஒரு லொறியின் பின்புறத்தில் 46 அகதிகள் சடலங்களாக கிடந்தார்கள். மேலும் 20க்கும் மேற்பட்டோர் உயிருக்கு போராடி கொண்டு இருந்தனர். அவர்கள் அனைவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், இறந்தவர்கள் எண்ணிக்கை 51 ஆக உயர்ந்துள்ளது. மேலும் 16 அகதிகளின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

இவர்கள் டெக்சாஸ் மாகாணத்தில் நிலவும் 103 டிகிரி பேரன்ஹீட் வெயிலுக்கு நடுவே லொறியில் கடத்தி கொண்டு செல்லப்பட்ட பிற நாட்டு அகதிகள் ஆவார்கள்.மெக்சிக்கோ வழியாக அகதிகளாக புகுந்தவர்களை பொலிஸாரே கடத்திசென்றமைஅதிர்ச்சியைஏற்படுத்தியுள்ளது.

ஒரே லொறியில் அனைவரையும் அடைத்து சென்றதால் மூச்சுத் திணறியும் தண்ணீர் இல்லாமலும் அதீத உஷ்ணத்தாலும் 51 பேர் இறந்துள்ளனர். இந்த சம்பவம் தனது இதயத்தையே நொறுக்கிவிட்டதாக அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார். இறந்தவர்களில் 22 பேர் மெக்சிக்கோ நாட்டைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

7பேர்கௌத்தமாலாநாட்டைச்சேர்ந்தவர்கள். இந்த சம்பவம் தொடர்பாக லொறி சாரதி உட்பட 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். எதற்காக அகதிகள் கைது செய்யப்பட்டார்கள் என்பது குறித்து விசாரணை நடைபெறுகிறது.







## வங்கியைக் கொள்ளையடிக்க முயற்சி இரண்டு பேரை சுட்டுக் கொன்ற படையினர்

கனடாவில வங்கியைக் கொள்ளையடிக்க முயற்சி செய்த இரண்டு பேர் பாதுகாப்பு படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அமெரிக்க எல்லை அருகில் உள்ள சானிச் என்னுமிடத்தில் உள்ள ஒரு வங்கியில் இரண்டு பேர் துப்பாக்கியுடன் புகுந்து வாடிக்கையாளர்களை மிரட்டி பணம்கொள்ளையடிக்க முயற்சித்தனர்.

பாதுகாப்பு படையினர் அவர்களை சுட்டுத் தள்ளினர். இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் 6 பொலிஸார் காயம் அடைந்தனர். அப் பகுதியில் வெடிகுண்டு ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து அக்கம் பக்கம் குடியிருந்தவர்கள் வெளியேற்றப்பட்டனர்.


## அமெரிக்க டொலரை ஓரம் கட்ட சதித்திட்டம் தீட்டுகின்றது சீனா

சர்வதேச அளவில் ஆதிக்கம் செலுத்தி வரும் அமெரிக்க டொலரை ஓரம் கட்டி, பணம் தேவைப்படும் சிறு நாடுகளுக்கு தனது நாட்டு கரன்சியான யுவானில் கடன் வழங்க, மலேசியா உட்பட பல்வேறு நாடுகளுடன் இணைந்து சீனா புதிய நிதியத்தை உருவாக்குகிறது. அமெரிக்காவின் கரன்சியான டொலர், உலகளாவிய நாணயமாக இருந்து வருகிறது. இது அமெரிக்காவின் பொருளாதாரத்திற்கு மிகவும் வலு சேர்க்கிறது. இந்நிலையில், அமெரிக்காவுக்கு போட்டியாக சீனா தனது சொந்த கரன்சியான யுவானை உலகளாவிய நாணயமாக மாற்ற பல ஆண்டாக முயற்சிக்கிறது.

இதே எண்ணம் கொண்ட ரஷ்யாவுடன் இணைந்து சீனா, இருதரப்பு டொலர் பயன்பாட்டை வெகுவாக குறைத்துள்ளது. சீனா–ரஷ்யா இடையேயான பல வர்த்தகங்கள் அவர்களின் சொந்த கரன்சியிலேயே நடக்கின்றன. மேலும், 40 நாடுகளுடன் 300 கோடி யுவான் மதிப்புள்ள இருதரப்பு நாணய பரிமாற்ற ஒப்பந்தத்தை சீனா செய்து கொண்டுள்ளது.

இந்நிலையில், சீனா அடுத்த கட்டமாக, யுவான் நிதித் தொகுப்பு ஒன்றை உருவாக்க களமிறங்கி உள்ளது. இதற்காக, சீனாவின் மக்கள் வங்கியுடன் சுவிட்ஸர்லாந்தில் உள்ள சர்வதேச தீர்வுகளுக்கான வங்கி (பி.ஐ.எஸ்.) உடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

இந்த நிதி தொகுப்பு ஒப்பந்தத்தில் சீனாவுடன் இந்தோனேஷியா, மலேசியா, ஹாங்காங், சிங்கப்பூர் மற்றும் சிலி ஆகிய 5 நாடுகள் இணைந்துள்ளன. இந்த யுவான் நிதியத்தை சர்வதேச தீர்வுகளுக்கான வங்கி நிர்வகிக்கும். பணவீக்கம், சந்தை ஏற்ற, இறக்க காலங்களில்



பணம் தேவைப்படும் உறுப்பு நாடுகளுக்கு இந்த நிதித் தொகுப்பிலிருந்து கடன் வழங்கப்படும். இந்த அமைப்பில் மேலும் பல நாடுகள் இணையும் பட்சத்தில், யுவானின் பரிமாற்றம் பல மடங்கு அதிகரிக்கும். ஏற்கனவே, இலங்கை, பாகிஸ்தான் உட்பட உலகம் முழுவதும் 40க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு பட்டுப்பாதை திட்டத்தின் கீழ் சீனா கடன் கொடுத்து, திவாலாக்கி இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.



## போர் முடிய எவ்வளவு காலமானாலும் உக்ரைனுக்கு ஆதரவுகள் தொடரும்

### ஜி 7 நாடுகள் மாநாட்டுக்கு இடையே தலைவர்கள் உறுதி

எவ்வளவு காலம் ஆனாலும் ரஷ்யாவிடமிருந்து உக்ரைனை பாதுகாக்க துணை நிற்போம் என ஜி 7 நாடுகள் தீர்மானம் நிறைவேற்றியுள்ளன.

ரஷ்யாவுக்கு மசகு எண்ணெய் மூலம் கிடைக்கும் வருவாயைத் தடுத்து நிறுத்தவும் உறுதி எடுக்கப்பட்டுள்ளது. ஜி7 மாநாட்டில் ரஷ்யாவுக்கு கடுமையான பொருளாதாரத் தடைகளை ஏற்படுத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

ரஷ்யாவிடமிருந்து மசகு எண்ணெய், தங்கம் இறக்குமதியைத் தடை செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கறுப்புக் கடல் வழியாக உக்ரைனுக்கு உணவு தானியங்கள் கொண்டு செல்ல உதவவும் ஜி 7 நாடுகள் உறுதியளித்துள்ளது.

## கலிபோர்னியாவில் மீண்டும் பற்றி எரியும் காட்டுத் தீ

### 135 ஏக்கர் வனப்பகுதி தீயில் எரிந்து நாசம்

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் ஏற்பட்ட காட்டுத்தீயால் 135 ஏக்கர் பரப்பளவு கொண்ட வனப்பகுதி தீயில் எரிந்து சாம்பலாகியுள்ளன.

ரெட்வுட் சானிட்டரி லாண்ட்பில் அருகே நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் பற்றியெரியும் காட்டுத் தீயால் அங்கு சுற்றுச்சூழல் பெரும் மாசடைந்துள்ளது.

இந்த காட்டுத்தீயால் கலிபோர்னியாவின் வான்வெளி முழுவதும் அடர் செந்நிறமாக மாறியதுடன் புகை மண்டலங்களாகவும் காட்சியளித்தன.

காடுகள் கருகி சாம்பலாகியுள்ள நிலையில், இதுவரை 75 சதவீதக் காட்டுத்தீ கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.



# ராஜஸ்தானில் தையல் தொழிலாளியின் தலை துண்டிக்கப்பட்டு வீடியோ வெளியீடு



## சந்தேகநபர்கள் கைதாகினர்

ராஜஸ்தான் மாநிலத்தின் உதய்பூரில் தையல் கடை நடத்தி வந்த கண்ணையா லால் என்பவரது கடைக்குள் புகுந்த இருவர் அவரை வலுக்கட்டாயமாக இழுத்துச்சென்று பொது இடத்தில் வைத்து தலையை துண்டித்துள்ளனர். இதுதொடர்பான வீடியோவையும் அவர்கள் வெளியிட்டனர். இது சமூக வலைத்தளங்களில் பரவியதால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

அண்மையில் சர்ச்சையில் சிக்கிய பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர் நூபுர் சர்மாவிற்கு ஆதரவாக சமூக வலைத்தளங்களில் கருத்து வெளியிட்டதாலேயே கண்ணையா லால் படுகொலை செய்யப்பட்டார் என செய்திகள் வெளிவந்துள்ளன. இந்தக் கொடூரச் சம்பவம் ராஜஸ்தானில்காட்டுத்தீயாகபரவியதால்அங்குகடையடைப்பு,வாகனங்களுக்குத் தீ வைப்புப் போன்ற வன்முறைகள் நடைபெற்றுள்ளன. மாநிலம் முழுவதும் பதற்றம் நிலவுவதால் அடுத்த 24 மணி நேரத்திற்கு அப்பகுதியில் இணையத்தள சேவை முடக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ராஜசமந்த் மாவட்டம் பீம் பகுதியில் வைத்து இரு சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளோம் என உதய்ப்பூர் காவல் துறை தெரிவித்துள்ளது. இந்தக் கொடூரக் கொலையால் ஏற்பட்டுள்ள பதற்றத்தைத் தணிக்க ராஜஸ்தான் முழுவதும் ஒரு மாதத்துக்கு 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. உதய்பூர் தையல்காரர் கொலையில் வெளிநாட்டுச் சதி ஏதும் இருக்குமா, என்ற கோணத்திலும் விசாரணை நடத்துவதற்காக இந்திய தேசிய புலனாய்வு அமைப்பு அதிகாரிகள் உதய்பூர் சென்றுள்ளனர்.

உதய்பூர் படுகொலை சம்பவத்தை கண்டிக்கிறேன் எனவும் இந்த சம்பவத்தில் தொடர்புடைய அனைத்து குற்றவாளிகள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ராஜஸ்தான் முதலமைச்சர் அசோக்கெலாட் தெரிவித்துள்ளார். அனைத்துத் தரப்பினரும் அமைதி காக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## அ.தி.மு.கவின் இரட்டை இலைச் சின்னத்தை முடக்குவதுதான் பா.ஜ.கவின் இலட்சியமென நாஞ்சில் சம்பத் குற்றச்சாட்டு



திருவள்ளூர் மாவட்டம் பெரிய பாளையம் பகுதியில் திராவிட மாதிரி பயிற்சிப் பாசறை நடைபெற்றது. இதில் நாஞ்சில் சம்பத், தி.மு.க. கொள்கை பரப்புச் செயலாளர் திருச்சி சிவா ஆகியோர் பங்கேற்று தி.மு.க. இளைஞரணி நிர்வாகிகளுக்கு திராவிடம் குறித்து எடுத்துரைத்தனர்.

பின்னர் செய்தியாளர்களோடு உரையாடிய நாஞ்சில் சம்பத், டெல்லி எஜமானர்கள் அனுமதியோடு அ.தி.மு.கவை எடப்பாடி பழனிசாமி குறைந்த விலைக்கு குத்தகைக்கு எடுத்துள்ளார். பா.ஜ.க. மாநிலக் கட்சிகளை வாழ விட்டதாக வரலாறு இல்லை. இதற்கு எடப்பாடி பழனிசாமி பலியாகியுள்ளார். பல்லாயிரம் கோடி கொள்ளையடித்த பணத்தில் பொதுக்குழு உறுப்பினர்களை விலைக்கு வாங்கியுள்ளார் எடப்பாடி பழனிசாமி, என்று தெரிவித்திருக்கிறார்.

ஓ.பி.எஸ்., இ.பி.எஸ். இருவரையும் கொம்பு சீவி கட்சியை உடைக்க முயற்சி நடைபெற்று வருகிறது. அழிந்து வரும் அ.தி.மு.கவை ஓ.பி.எஸ்., இ.பி.எஸ். இருவராலும் காப்பாற்ற முடியாது. இரட்டை இலைச் சின்னத்தை முடக்குவதுதான் பா.ஜ.கவின் லட்சியம். இரட்டை இலை சின்னத்தை முடக்கி அங்கே பா.ஜ.க. அமர முயற்சிக்கிறது. ஆனால், எக்காரணம் கொண்டும் தமிழ்நாட்டில் பா.ஜ.கவை வரவிடமாட்டோம், எனவும் நாஞ்சில் சம்பத் குறிப்பிட்டார்.

## மும்பைக்குத் திரும்பி வருமாறு சிவசேனா கட்சியின் அதிருப்தி எம்.எல்.ஏக்களுக்கு உத்தவ் தாக்கரே அழைப்பு



சிவசேனா மூத்த மந்திரி ஏக்நாத் ஷிண்டே கட்சி தலைமைக்கு எதிராக அதிருப்தி எம்.எல்.ஏக்களுடன் அசாம் மாநிலம் கவுகாத்தியில் முகாமிட்டு உள்ளதால் மகாராஷ்டிரா அரசியலில் பரபரப்பு நிலவி வருகிறது.

இதில் அதிருப்தி எம்.எல். ஏக்கள் மீது தகுதி நீக்க நடவடிக்கை எடுக்க சுப்ரீம் கோர்ட் தடை விதித்துள்ளது. அதே நேரத்தில் சட்டசபையில் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வர எந்த தடையும் விதிக்கப்படவில்லை. இந்தநிலையில் மும்பை திரும்புமாறு அதிருப்தி எம்.எல்.ஏக்களுக்கு மாநில முதலமைச்சர் உத்தவ் தாக்கரே அழைப்பு விடுத்து உள்ளார்.

இப்போதும் ஒன்றுமில்லை. நீங்கள் திரும்பி வந்து என்னுடன் உட்காருங்கள். பொதுமக்கள், சிவசேனா தொண்டர்களிடம் நிலவும் குழப்பத்தை போக்குங்கள். நீங்கள் திரும்பி வந்து, என்னை நேருக்கு நேராக சந்தித்தால் வழிபிறக்கும். கட்சியின் தலைவராகவும், குடும்ப தலைவனாகவும் உங்கள் மீது இன்னும் எனக்கு அக்கறை உள்ளது. நீங்கள் கடந்த சில நாள்களாக கவுகாத்தியில் சிக்கி உள்ளீர்கள். ஒவ்வொரு நாளும் புதிய செய்தி வருகிறது. உங்களில் பலர் தொடர்பில் இருக்கிறீர்கள். உங்கள் மனதளவில் நீங்கள் இன்னும் சிவசேனாவில் தான் உள்ளீர்கள். உங்களின் குடும்பத்தினரும் என்னுடன் தொடர்பில் உள்ளனர், என்று உத்தவ் தாக்கரே தெரிவித்திருக்கிறார்.

## கர்நாடகத்தில் மின் கட்டணம் திடீர் உயர்வு ஜூலை முதலாம் திகதி முதல் அமுலாகுமாம்



கர்நாடகத்தில் தனியார் மின் விநியோக நிறுவனங்கள் மூலம் நுகர்வோருக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. ஆண்டுதோறும் ஏப்ரல் முதலாம் திகதியில் மின் கட்டணம் மாற்றி அமைக்கப்படுவது வழக்கம். அதன்படி கடந்த ஏப்ரல் மாதம் மின் கட்டணம் சராசரியாக யூனிட் ஒன்றுக்கு 35 சதம் உயர்த்தப்பட்டது.

இந்த நிலையில் நிலக்கரி விலை உயர்வு, அனல் மின் நிலையங்களின் பராமரிப்பு செலவு அதிகரிப்பு போன்றவற்றால் மின் விநியோக நிறுவனங்கள் இழப்பைச் சந்தித்து வருகின்றன என கூறப்படுகிறது. இந்த இழப்பை ஈடுகட்டும் பொருட்டு கர்நாடகத்தில் மின் கட்டணம் மீண்டும் உயர்த்தப்பட்டுள்ளது. இந்தகட்டணஉயர்வுஒவ்வொருமின்விநியோக நிறுவனங்களுக்கும் இடையே வெவ்வேறு அளவில் உயர்த்தப்படுகிறது. இந்த மின் கட்டண உயர்வு வருகிற ஜூலை முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரவிருக்கிறது.


தற்போது உயர்த்தப்பட்டுள்ள இந்த கட்டணம் 6 மாதங்களுக்கு அதாவது வருகிற டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை அமலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் மின் கட்டணம் உயர்த்தப்பட்டதால், 50 யூனிட் வரை மின்சாரத்தை பயன்படுத்தும் நுகர்வோருக்கு மின் கட்டணம் 523 இல் இருந்து 545 ரூபா ஆகவும், 100 யூனிட் வரை பயன்படுத்துவோருக்கு 990 இல் இருந்து 1,015 ஆகவும் அதிகரித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த திடீர் மின் கட்டண உயர்வால் பொது மக்களும் தொழில் நிறுவனங்கள், தொழிற்சாலைகளை நடத்தி வருபவர்களும் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

ஏற்கனவே பெற்றோல் விலை உயர்வு, மூலப்பொருள்கள் விலை உயர்வால் செய்வதறியாது திகைத்து வரும் தொழில் முனைவோர் தற்போது மின்கட்டண உயர்வால் மேலும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளோம் என தெரிவித்துள்ளனர்.

## மும்பை கட்டட விபத்தில் 19 பேர் சாவு ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் இரங்கல்



மகாராஷ்டிரா மாநிலத்தின் குர்லாவின் கிழக்கு பகுதியில் உள்ள நாயக் நகரில் 4 மாடிகளை கொண்ட அடுக்கு மாடி குடியிருப்பு திடீரென இடிந்து விழுந்தது. தகவலறிந்து தீயணைப்புப் படையினரும், பொலிஸாரும் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கிய இருபதுக்கும் மேற்பட்டோரை மீட்டு அருகிலுள்ள மருத்துவமனைகளுக்கு அனுப்பிவைத்தனர்.

இந்தக் குர்லா கட்டட விபத்தில் பலியானோர் எண்ணிக்கை 19 ஆக உயர்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 5 பேர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அதிகாரிகள் தெரிவித்தனர். குர்லாவில் கட்டட இடிபாடுகளில் இருந்து பெண்ணொருவர்உயிருடன்மீட்கப்பட்டுள்ளார். இந்நிலையில், மும்பை கட்டட விபத்தில் பலியானோரது குடும்பத்தினருக்கு இந்திய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தனது இரங்கல்களைத் தெரிவித்துள்ளார்.

# வைத்தியரை மாற்றக் கோரி பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

## மஹதிவுல்வெவவில் நேற்று நடந்தது




திருகோணமலை – மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் கடமையாற்றி வரும் வைத்திய அதிகாரியை உடனடியாக இடமாற்றுமாறு கோரி பிரதேச மக்கள் நேற்றுக் காலை 9.00 மணி முதல் 12.00 மணி வரை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'எமது வைத்தியசாலை எமக்கு வேண்டும்', 'நோயாளிகளை கவனிக்காத வைத்தியர் எமக்கு வேண்டாம்', 'நோயாளர்களின் நோய்களை கூறும்போது கிண்டலடிக்கும் வைத்தியர் வேண்டாம்', 'டொக்டர் சோபா எமக்கு வேண்டாம்' என்ற பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர்.

தற்போது மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றி வரும் டொக்டர் சோபா கும்புரேகம என்பவர் அநாகரிகமான முறையில் தமது கடமைகளை மேற்கொண்டு வருகின்றமையுடன், நோயாளர்கள் வைத்தியசாலைக்கு செல்லும் போது தேவையற்ற வசனங்களை நோயாளர்களைத் துன்புறுத்தும் விதத்தில் பாவித்து வருகிறார் எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் இதன் போது குறிப்பிட்டனர்.

இதேவேளை ஆர்ப்பாட்டக்காரர்கள் வைத்தியசாலைக்கு உள்ளே சென்று கடமை நேர வைத்திய அதிகாரி டாக்டர் டுலான் பெரேராவிடம் மகஜர் ஒன்றினையும் கையளித்தனர்.

இம் மகஜரை திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்பி வைப்பார் எனவும், தற்போது அந்த வைத்திய அதிகாரியான டொக்டர் சோபா கும்புரேகம கடமையில் இல்லையெனவும், அவர் வெளியே சென்றுள்ளார் எனவும் கடமை நேர வைத்திய அதிகாரி ஆர்ப்பாட்டக்காரர்களிடம் தெரிவித்தார். இதனை அடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் இரண்டு நாள்களுக்குள் அந்த வைத்தியரை இடமாற்றம் செய்யாவிட்டால் மீண்டும் பாரிய எதிர்ப்பைக் காட்டுவோம் எனவும் இதன் போது தெரிவித்தனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கிரான் பிரதேச செயலகப் பிரிவில் பாதிப்புற்றோருக்கு நிவாரணங்கள்





மட்டக்களப்பு கிரான் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள – வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட – விவசாய கிராம மக்களுக்கு 'பாம்' நிறுவனத்தினால் ஒரு தொகுதி நிவாரணப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச செயலாளர் எஸ்.ராஜ்பாபு தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அனர்த்த முகாமைத்துவ பிரிவிற்கான அதிகாரி எஸ்.சிற்றம்பலம், பாம் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் சுனில் டொம்பேபொல, அதன் வெளிக்கள உத்தியோகத்தர்களான திருமதி பிரியதர்சினி சந்திரலிங்கம், ரஞ்சித்குமார், சர்மிலா ஆகியோர்களுடன் கிராமசேவகர்களும் கலந்து கொண்டு மக்களுக்கான நிவாரணப் பொதிகளை வழங்கி வைத்தனர். இந்த நிவாரணப் பொதிகள் கிரான் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பொண்டுகள் சேனை, கோராவெளி, குடும்பிமலை, முறுத்தானை ஆகிய 4 கிராமசேவகர் பிரிவுகளில் 6 கிராமங்களைச் சேர்ந்த 100 குடும்பங்களுக்கு தலா 5,000 ரூபா பெறுமதியில் வழங்கப்பட்டன.

மாவட்ட உதவி அரசாங்க அதிபரின் ஆலோசனையின்படி இந்த மனிதநேய உதவிகள் வழங்கிவைக்கப்பட்டன. இதற்கான நிதி அனுசரணையை அமெரிக்க நாட்டின் 'வேள்ட்' நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது.

# மோ. சைக்கிள்களிலிருந்து பெற்றோல் திருடும் கும்பல்!

## உஷாராக இருக்க எச்சரிக்கை



திருகோணமலை வினாயகபுரம் பகுதியில் கும்பல் ஒன்று வீட்டுக்கு வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளில் பெற்றோலை திருடும் காட்சி அங்கிருந்த சி.சி. ரி.வி. பாதுகாப்பு கமரா வில் பதிவாகியிருந்தது.

நான்குபேரைக் கொண்ட குழு ஒன்றில் மூன்றுபேர் வீதிகளில் காவல் பணிகளில் ஈடுபட ஒரு நபர் மோட்டார் சைக்கிளில் இருந்து பெற்றோலைத் திருடுகின்ற சம்பவமே வினாயகபுரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இலங்கையில் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்ற இன்றைய சூழலில் பலர் எரிபொருளை பதுக்கும் நடவடிக்கைகளிலும், அதிகமான விலைக்கு விற்பனை செய்கின்ற நடவடிக்கைகளிலும், தரித்து நிற்கின்ற வாகனங்களில் எரிபொருளை திருடுகின்ற நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றார்கள். குறிப்பாக போதைப் பொருள் பழக்கத்திற்கு அடிமையாகியுள்ள இளைஞர்கள் இது போன்ற திருட்டுச் சம்பவத்தில் அதிகம் ஈடுபட்டுவருகின்றனர் எனத் தெரிய வருகின்றது.

எனவே மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

# கித்துல் ஊற்று விபத்தில் 3 கடற்படையினர் காயம்

## ஒருவரின் நிலை கவலைக்கிடம்



திருகோணமலை – ஹபரண பிரதான வீதியின் கித்துல் ஊற்று என்னுமிடத்தில், நேற்று முன்தினம் கடற்படையினர் சென்ற கப் வாகனம் டிப்பருடன் மோதியதில் மூன்று கடற்படை வீரர்கள் படுகாயமடைந்தனர். அவர்கள் கந்தளாய் தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கற்படை கப் வாகனம் கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கி சென்ற வேளையில், கந்தளாய் கித்துல் ஊற்று என்னுமிடத்தில் முன்னால் சென்ற டிப்பரை முந்திச் செல்ல முற்பட்ட போது இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

காயமடைந்த கடற்படை வீரர் ஒருவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு








# சிரேஷ்ட ஊடகவியலாளர் தரிந்துவிடம் சி.ஐ.டியினர் 4 மணி நேரம் விசாரணை

சிரேஷ்ட ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதரவை நேற்று (புதன்கிழமை) விசாரணைக்கு அழைத்த சி.ஐ.டியின் கணினிக் குற்ற விசாரணைப் பிரிவு, அவரிடம் சுமார் 4 மணி நேரம் விசாரணைகளை நடத்தி வாக்கு மூலம் பதிவு செய்துள்ளது.

கடந்த வருடம் (2021) செப்டெம்பர் மாதம் 6 ஆம் திகதி விமானப்படை உளவுப் பிரிவு அளித்த முறைப்பாட்டுக்கு அமைய இந்த விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளமையுடன்,குறித்த ஊடகவியலாளர் நடத்தி செல்லும் ‘சட்டன ’ எனும் யூரியூப் அலைவரிசையில் பதிவேற்றப்பட்ட வீடியோக்களின் தலைப்பும் அவற்றின் உள்ளடக்கமும் ஒன்றுடன் ஒன்று பொருந்தவில்லை எனக் கூறி இவ் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன.

அரசாங்கத்தை விமர்சிக்கும் வண்ணம் குறித்த வீடியோக்கள் அமைந்துள்ளன என விசாரணையின் போது சுட்டிக்காட்டப்பட்டு, வாக்கு மூலம் ஒன்று பெறப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் 9 மணிக்கு சி.ஐ.டியின் கணினி குற்ற விசாரணை அறையின் உப பொலிஸ் பரிசோதகர் மதுங்க முன்னிலையில் ஆஜரான ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதரவிடம் பிற்பகல் ஒரு மணி வரை விசாரணைகள் நடத்தப்பட்டிருந்தன. இதன்போது சி.ஐ.டிக்கு முன்பாக ஊடகவியலாளர்களும், சமூக செயற்பட்டாளர்களும் சேர்ந்து அமைதி ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்த நிலையில், கருத்து சுதந்திரத்தையும், ஊடக சுதந்திரத்தையும் உறுதி செய்யுமாறு அவர்கள் வலியுறுத்தினர். சி.ஐ.டி. விசாரணைகளின் போது ஊடகவியலாளர் தரிந்து உடுவரகெதரவுடன் சட்டத்தரணி பிரபோத ரத்நாயக்க சி.ஐ.டியில் ஆஜரானமை குறிப்பிடத்தக்கது.

## ரஷ்ய விமானத்துக்கெதிரான வழக்கை தள்ளுபடி செய்யுமாறு சட்ட மா அதிபர் கோரிக்கை

ரஷ்யாவின் ஏரோபுளொட் விமான சேவைக்குச் சொந்தமான விமானமொன்றுக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என சட்ட மா அதிபர் கொழும்பு வணிக மேல் நீதிமன்றில் கோரிக்கை விடுத்தார்.

மேற்படி வழக்கில் 2 ஆம் பிரதிவாதியாக பெயரிடப்பட்டுள்ள விமான நிலையம் மற்றும் சிவில் விமான சேவைகள் நிறுவனம் சார்பில் நகர்த்தல் பத்திரம் ஒன்றை முன்வைத்து நேற்று (செவ்வாய்க்கிழமை) வழக்கை விசாரணைக்கு அழைத்தே, சட்ட மா அதிபர் சார்பில் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரால் ஜனாதிபதி சட்டத்தரணி சுமதி தர்மவர்தன இந்தக் கோரிக்கையை முன் வைத்தார். மேலதிக சொலிஸிட்டர் ஜெனரால் சுமதி தர்மவர்தன கொழும்பு வணிக மேல் நீதிமன்ற நீதிபதி ஹர் சேதுங்க முன்னிலையில் இது தொடர்பாக வாதங்களை முன் வைக்கும் போது, ரஷ்யாவின் ஏரோபுளொட் விமானம் தற்போது, இந்த நீதிமன்றின் (கொழும்பு வணிக மேல் நீதிமன்றம்) அதிகார எல்லைக்கு வெளியே சென்றுவிட்டதால், மேற்படி வழக்கை முன் கொண்டு செல்ல முடியாது எனவும் அதனால் அவ்வழக்கைத் தள்ளுபடி செய்யுமாறும் கோரினார்.

நீதிமன்றை தவறாக வழி நடத்தி ரஷ்யாவின் ஏரோபுளொட் விமானத்துக்கு எதிராக கடந்த ஜுன் 2 ஆம் திகதி தடை உத்தரவு பெற்றுக்கொள்ளப்பட்டாலும், அதனை ஜுன் 6 ஆம் திகதி நீதிமன்றம் நீக்கியதாகவும் அதனையடுத்து அந்த விமானம் இந்த நீதிமன்ற அதிகார எல்லைக்கு அப்பால் சென்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.இலங்கையில் விமானம் இல்லாததால், வழக்கை தொடர எந்த நடவடிக்கையும் இல்லை. நீதிமன்றத்தால் வழங்கப்படும் உத்தரவு இலங்கையின் பொதுக் கொள்கையின் கட்டமைப்பிற்குள் இருக்க வேண்டும். எனவே சிவில் நடைமுறை சட்டக் கோவையின் 56 ஆவது அத்தியாயத்தின் பிரகாரம் இவ்வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிடவும் – எனக் கோரினார்.

இதன்போது ரஷ்யாவின் ஏரோபுளொட் விமான சேவை சார்பில் மன்றில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி கலாநிதி லசந்த ஹெட்டி ஆரச்சி, தடை உத்தரவு நீக்கப்பட்டாலும் மேற்படி விமான சேவை இலங்கைக்கான சேவைகளை நிறுத்திக்கொண்டுள்ளதாகவும் அதனால் இவ்வழக்கை விசாரிக்க அல்லது பரிசீலிக்க மிக கிட்டிய திகதியொன்றை வழங்குமாறு கோரினார்.

இந்நிலையில் விடயங்களை ஆராய்ந்த கொழும்பு வணிக மேல் நீதிமன்ற நீதிபதி ஹர் சேதுங்க, இவ்வழக்கை விசேட வழக்காக எதிர்வரும் 5 ஆம் திகதி விசாரணைக்கு அழைத்து, விடயங்களை ஆராய்ந்த பின்னர் மனுவை தள்ளுபடி செய்வதா இல்லையா என்ற உத்தரவை பிறப்பிப்பேன் என அறிவித்தார்.


அயர்லாந்தில் உள்ள செலஷ்டியல் ஏவியேன் ட்ரேடிங் லிமிடெட் நிறுவனம் முறைப்பாடொன்றினை தாக்கல் செய்துள்ளது. அயர்லாந்தில் உள்ள செலஸ்டியல் ஏவியேன் ட்ரேடிங் லிமிடெட், ஏரோபுளோட் ரஷியன் ஏர்லைன்ஸுக்கு எதிராக, இருதரப்பினருக்கு இடையேயான குத்தகை ஒப்பந்தத்தின் விதிமுறைகளுக்கு இணங்கத் தவறியமைக்காக இவ்வாறு முறைப்பாட்டு மனுவை தாக்கல் செய்துள்ளது.

இந்நிலையில் இந்த முறைப்பாட்டு மனு தொடர்பில், ரஷ்ய விமான சேவை நிறுவனம் சார்பில் சட்டத்தரணி கலாநிதி லசந்த ஹெட்டி ஆரச்சி ஆஜராவதுடன் மனுதாரரான அயர்லாந்து நிறுவனம் சார்பில் சட்டத்தரணி அனுர டி சில்வாவுடன் ஜனாதிபதி சட்டத்தரணி அவிந்ர ரொட்ரிகோ ஆஜராகின்றார்.

சட்ட மா அதிபர் சார்பில் அரசின் மேலதிக சொலிஸிட்டர் ஜெனரால் சுமதி தர்மவர்தன தலைமையிலான சிரேஷ்ட பிரதி சொலிஸிட்டர் ஜெனரால் மஹேன் கொபல்லாவ, பிரதி சொலிஸிட்டர் ஜெனரால் ரஜீவ் குணதிலக உள்ளிட்ட குழுவினர் ஆஜராகின்றமை குறிப்பிடத்தக்கது.

# முல்லை விசுவமடு பகுதிக்கு ஜப்பானியத் தூதர் விஜயம்!





முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடுபகுதியில் அமைந்துள்ள பனை தென்னை வள கூட்டுறவு சங்கத்தின் தலைமைக் காரியாலயத்துக்கு நேற்று (செவ்வாய்க்கிழமை) ஜப்பானிய தூதுவர் விஜயம் மேற்கொண்டிருந்தார். இலங்கை மற்றும் ஜப்பான் நாடுகளின் கூட்டுறவின் அடையாளமாக ஜப்பான் அரசின் நிதிப்பங்களிப்பில் நன்கொடையாக வழங்கப்பட்ட தேங்காய் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திற்கு இயந்திரம் ஒன்று 20 லட்சம் ரூபா பெறுமதியில் கடந்த 2021 ஆண்டு வழங்கப்பட்டது.

அதன் பயன்பாட்டை பார்வையிடுவதற்காக ஜப்பான் நாட்டு தூதுவர் நேற்று நேரில் சென்றிருந்தார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.06.2022இல் வெளியிடப்பெற்றது.